# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூன் 29, 2024 Weekly E-paper ● June 29, 2024





## நீட் எதிர்ப்பு – புதிய பரிமாணம்!

சுப. வீரபாண்டியன்

## இயக்கப் பணி எழுச்சிப்பணி

சிற்பி செல்வராஜ்

## சட்டமன்றத் தீர்மானம்...!

தலையங்கம்

## ‘பொறுப்பாளர்கள் நியமனம்’

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூன் 29, 2024 Weekly E-paper ● June 29, 2024


# நீட் எதிர்ப்பு – புதிய பரிமாணம்!

சுப. வீரபாண்டியன்




*2013 ஆம் ஆண்டு நீட் தேர்வு தலைகாட்டியது என்றாலும், 2017 ஆம் ஆண்டு முதலே, தமிழ்நாடு உள்பட இந்தியா எங்கும் அது கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டது! அன்று தொடங்கி, தமிழ்நாட்டில் அந்தத் தேர்வு முறைக்கு கடும் எதிர்ப்பு உருவாயிற்று!*

*12 ஆண்டுகள் பள்ளியில் படித்து பெற்ற மதிப்பெண்கள் எல்லாம், மதிப்பற்ற எண்களாயின. நீட் தேர்வில் வெற்றி பெற்றால்தான் மருத்துவராக முடியும் என்னும் சமூக அநீதியைத் தமிழ்நாடு எதிர்த்தது. தி.மு.கழகமும், திராவிட இயக்கங்களும் முன்வரிசையில் நின்று அந்தத் தேர்வை எதிர்த்தன.*

*அரியலூருக்கு அருகில், குழுமூர் என்னும் ஊரில் ஒரு கூலித் தொழிலாளியின் மகளாகப் பிறந்து, தன் கடின உழைப்பால் 1200க்கு 1176 மதிப்பெண்களைப் பெற்ற அனிதா என்னும் மாணவி, நீட் தேர்வில் வெற்றி பெற முடியாததால், தன் மருத்துவக் கனவை இழந்தாள். தற்கொலை செய்து கொண்டு தன் உயிரையும் இழந்தாள். அந்தப் பெண்ணைத் தொடர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் பலர் இந்த நீட் தேர்வினால் தங்கள் உயிரை இழந்தார்கள்.*

*அன்று தமிழ்நாடு மட்டும் போராடியது. இன்று நீட் தேர்வை எதிர்த்து இந்தியாவே போராடிக் கொண்டிருக்கிறது. என்ன காரணம்? எப்படி வந்தது இந்த மாற்றம் ?*

*இந்த ஆண்டு நடைபெற்ற நீட் தேர்வில் 67 மாணவர்கள் 720 க்கு 720 மதிப்பெண்களைப் பெற்றிருந்தனர். ஓர் ஆண்டில் ஓர் 20 தான் இப்படி முழு மதிப்பெண்களை பெறுவர் ஆனால் இந்த ஆண்டு இந்த அதிசயம் எப்படி நடந்தது? அரியானாவில் ஒரே மையத்தில் தேர்வு எழுதிய ஒன்பது பேர் முழுமதிப்பெண்களைப் பெற்றிருந்தார்கள்.*

*மெல்ல மெல்ல உண்மைகள் வெளிவந்தன. வினாத்தாள் கசிந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பீகாரில் வினாத்தாள் கசிவிற்குக் காரணமாக இருந்த 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இப்போது இந்தியா முழுவதும் போராட்டம் நடைபெறுகிறது. கன்னியாகுமரி தொடங்கி காஷ்மீர் வரை மாணவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.*

*இந்தியத் தலைநகரம் தில்லியில் உள்ள ஜந்தர்மந்தரில் மாணவர்களும், பெற்றோர்களும் அன்றாடம் போராடிக் கொண்டுள்ளனர். இப்போதும் ஒன்றிய அரசு அடம்பிடிக்கிறது. எந்தத் தவறும் நடக்கவில்லை என்று சொல்லிப் பிடிவாதம் செய்கிறது!*



*மாணவர்களின் உயிர்களைப் பலி வாங்கி, எதிர்காலத்தை இருட்டாக்கி, மருத்துவக் கனவுகளை எட்டாத கனியாக்கி, அலங்கோலம் செய்து வரும் நீட் தேர்வு விரைவில் விடைபெறும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது. அந்த நம்பிக்கை உண்மையாக வேண்டுமானால், அனைவரும் சேர்ந்து போராட வேண்டும்!* ●

# இயக்கப் பணி; நம், எழுச்சிப்பணி

**சிற்பி செல்வராஜ்**



திராவிட இயக்கத் தமிழர் பேரவை திருச்சி மாநகரில் நடத்திய 23-6-2024ஆம் நாள் பொதுக் குழுவில் ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இதில் 3 ஆம் தீர்மானம், சுயமரியாதை இயக்க நூற்றாண்டை முன்னிட்டுக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் போன்றவைகள் மூலம் கருத்துப் பரப்பும் பணியை பேரவை முன்னெடுக்க வேண்டும் என்பதைச் சொல்கிறது. சுயமரியாதைப் பரப்புரை என்றால் என்ன? 5 ஆம் தீர்மானத்தைத் தவிர 1, 2, 4 ஆகிய தீர்மானங்களில் இதற்கான விடை இருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

சாதி, தீண்டாமை போன்றவை சமூக ஒடுக்குமுறை. 'நீட்' நுழைவுத் தேர்வும் கூட கல்வித் துறையில் நுழைக்கப்பட்டு இருக்கும் தீண்டாமையே! இவை ஒடுக்குமுறையின் ஆதிக்க வடிவம். இவைகளின் மூலவேர் வேதகாலத்தில் இருந்து தொடங்கியது.

அப்போதே ஆரியப் பார்ப்பனியத்திற்கு எதிரான சமூகநீதிப் போராட்டத்தை புத்தர் தொடங்கினார், அது இன்றுவரை நீடிக்கிறது. ஆகவே பார்ப்பனியம் சமூக அநீதிக்கான பின்புலமாக இருந்து வருகிறது.

1920 களில் வடநாட்டில் ஆர்.எஸ்.எஸ் என்ற இந்துத்துவா இயக்கம் சித்பவன பார்ப்பனர்களின் தலைமையில் இயங்கி வரும் பாசிச இயக்கம். அதற்குப் பல துணை அமைப்புகளும் இருக்கின்றன.

தென்னாட்டில் டாக்டர் நடேசனாரைச் செயலாளராகக் கொண்ட 'திராவிடர் சங்கம்', 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்', 'திராவிடர் கழகம்', திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற வழியில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் இன்று திராவிடக் கருத்தியலோடு 'திராவிட இயக்கத் தமிழர் பேரவை' என்ற அமைப்பாகக் களத்தில் அணிதிரண்டு இருக்கிறோம்.

தந்தை பெரியாரால் பயிற்றுவிக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கருத்தியலில் உரம் ஏற்றப்பட்டது திராவிட இயக்கத் தமிழர் பேரவை.

கடந்த 15 ஆண்டுகளில் திராவிட, சுயமரியாதை, பகுத்தறிவு, சமூக நீதிகளுக்கான பணிகளை மேற்கொண்டோம், அமைப்புப் பணிகளோடு.

ஆர்.எஸ்.எஸ். வன்முறையில், பிற்போக்குக் கருத்தியலில் வலிமை வாய்ந்தது.

அறவழியில் அதை எதிர்க்க நாமும் நம் அமைப்பை பலப்படுத்தவும், விரிவு படுத்தவும் வேண்டும்.

மாவட்டங்களில், ஒன்றியங்களில், நகர்புறங்களில், கிராமங்களில் எல்லாம் பேரவையின் கிளைகள் உருவாக்க வேண்டும். உறுப்பினர்கள் பெறுகவேண்டும்.

வகுப்புகள், கருத்தரங்கங்கள், பொதுக் கூட்டங்கள் என்று மாவட்டம் தோறும் திராவிடச் சமூகநீதிக் கருத்துகளைக் கொண்டு செல்லவேண்டும்.

எதிரியை எளிதாக எடை போட்டுவிடக் கூடாது என்பதை உணர்த்தி, நம் இயக்கப் பணிக்கு

கூடுதல் உத்வேகம் கொடுத்திருக்கிறது திருச்சிப் பொதுக்குழு.

இயக்கப்பணி செய்வோம் - அதை

எழுச்சியுடன் செய்வோம் !

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## சட்டமன்றத் தீர்மானம்...!

நடைபெற்றுக் கொண்டு இருக்கும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் 2021ஆம் ஆண்டு எடுக்கப்பட வேண்டிய மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன், சாதிவாரிக் கணக்கெடுப்பையும் நடத்திட வேண்டும் என்ற தனிநபர் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியுள்ளார் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஆங்கிலேயர் ஆட்சியில் 1865 மற்றும் 1931ஆகிய ஆண்டுகளில் மக்கள் தொகை மட்டுமே கணக்கெடுக்கப் பட்டது. 2011ஆம் ஆண்டு சாதிவாரியாகவும் சேர்த்து கணக்கெடுக்கப் பட்டாலும், அது வெளியிடப் படவில்லை.

இடஒதுக்கீடு அளிக்க சரியான தரவுகள் தெரியவும், ஒவ்வொரு சமூகத்தின் சமூக, பொருளாதாரத்தின் பின்னணி அறிந்து அரசு நலத்திட்டங்கள் மேற்கொள்ளவும், வெவ்வேறு சாதிகள் தங்களின் சாதி எண்ணிக்கையின் அடிப்படையில் வைக்கும் கோரிக்கைகள் சரியா போன்றவைகளை அறியவும், சாதிவாரிக் கணக்கெடுப்பு அவசியம்.

இதை மாநில அரசே எடுக்கலாம் என்று சில கட்சிகள் சொன்னாலும், மத்திய ஒன்றிய அரசுதான் இதைச் செய்ய வேண்டும் என்று நம்முதல்வர் சான்றுகளுடன் விளக்கி இருக்கிறார்.

சாதிவாரிக்கணக்கெடுப்பை விரும்பாத மோடியின் பா.ஜ.க. அரசு, மெத்தனமாக இருக்காமல் உடனே சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும்.

இது குறித்த தி.மு.கழக அரசின் தீர்மானத்தை வரவேற்போம்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

## வெற்றிச்செல்வன்

இன்று மயிலாடுதுறை என்று அழைக்கப்பெறும் அன்றைய தஞ்சை மாவட்டம் மாயவரத்தில் 1925ஆம் ஆண்டு ஒரு மாநாடு நடைபெற்றது. தேவதாசி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் நடத்தப்பட்ட அந்த மாநாட்டை நடத்தியது மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். அம்மாநாடு தேவதாசி ஒழிப்பு வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். தந்தை பெரியாரும், திரு. வி.கல்யாணசுந்தரனாரும் இம்மாநாட்டில் பங்கேற்று, தேவதாசி முறை ஒழிக்கப்படுவதற்குத் தங்களது ஆதரவினைத் தெரிவித்தனர். பின்னாளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோரி காங்கிரசிலிருந்து வெளியேறிய பெரியாருடன் இராமாமிர்தமும் வெளியேறினார். பெரியாருடன் இணைந்து சுயமரியாதை இயக்கத்தில் பணியாற்றினார்.

தேவதாசி முறை ஒழிப்பிற்கான நெடும்போராட்டத்தில் கடுமையான நெருக்கடிகளைச் சந்தித்தவர் இராமாமிர்தம் அம்மையார். ஒருமுறை மேடையில் பேசிக்கொண்டிருந்தபொழுது அவரது முடி வெட்டப்பட்டது. மற்றொரு முறை, அவருடைய உணவில் நஞ்சு கலக்கப்பட்டு அவரைக் கொல்ல முயற்சி நடைபெற்றது.

பெரியார் இரண்டாவது சுயமரியாதை மாநாட்டை 1930ஆம் ஆண்டு ஈரோட்டில் நடத்தினார். இந்த மாநாட்டில் இராமாமிர்தம் அம்மையாரும் கலந்து கொண்டார். இம்மாநாட்டில்தான் கடவுளின் பெயரால் தேவதாசிகளாக, சிறுமிகளை ஈடுபடுத்தும் முறை ஒழிக்கப்படவேண்டும் என்றும், இம்முறையிலிருந்து மீண்ட பெண்களை இளைஞர்கள் திருமணம் செய்துகொள்ள முன்வரவேண்டும் என்றும், டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் தேவதாசி ஒழிப்பு மசோதா விரைவில் சட்டமாக்கப் படவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருந்த இராவ்சாகிப் அய். குமாரசாமிப்பிள்ளை தமிழர் பெரும்படையின் தலைமைப் பொறுப்பு ஏற்றார். பட்டுக்கோட்டை அழகிரிசாமி தளபதியாக இருந்து படையை நடத்தி வந்தார். 300 மைல் தொலைவு நடந்து வந்த இத்தமிழர் பெரும்படையின் தொண்டர்களில் அறுபது வயது நிரம்பிய இராமாமிர்தம் அம்மையாரும் ஒருவர். சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, 14.11.1938 அன்று கைது செய்யப்பட்டார். இவ்வாறு தமிழ்மொழிப் பாதுகாப்புக் களத்திலும் இவருடைய பங்கு குறிப்பிடத்தக்கது.

தேவதாசி ஒழிப்புக் களத்தில் தொடர்ந்து மேடையில் பேசுவதோடு, எழுத்தின் வாயிலாகவும் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். 'தாசிகள் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்' என்னும் நாவல் இவரது எழுத்துப் பணிக்குச் சான்று. தமயந்தி என்னும் தொடர்கதையையும் அண்ணாவின் திராவிட நாடு இதழில் எழுதினார். காங்கிரஸ், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று தொடர்ந்து பொது வாழ்க்கையில் ஈடுபட்ட இராமாமிர்தம் அம்மையார், 27-06-1962 இல் இயற்கை எய்தினார் ●

# பேரவைப் பொதுச்செயலாளர் அறிவிப்பு!

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

கடந்த 23-06-2024 அன்று திருச்சியில் நடைபெற்றத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுக்குழுவில் பேரவைத் தலைவர் அவர்களுடன் கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் கீழ்காணும் பேரவைத் தோழர்கள் உரிய பொறுப்புகளில் நியமிக்கப் பட்டுள்ளனர்.

## (வடக்கு மண்டலம்)

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் அம்பத்தூர் ராஜு

மாவட்டச் செயலாளர்: தோழர் மோகன்ராம்

மாவட்டப் பொருளாளர்: தோழர் ஜெயபாலன்.

ஆவடி மாநகர அமைப்பாளர்: ஆவடி மூர்த்தி.

### திருவண்ணாமலை மாவட்டம்.

வடக்கு மாவட்ட அமைப்பாளர்: தோழர் பன்னீர்செல்வம்

தெற்கு மாவட்ட அமைப்பாளர்: தோழர் இராஜேந்திரன்

### காஞ்சி மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் சிலம்பரசன்

மாவட்டச் செயலாளர்: தோழர் சாரதாதேவி

### செங்கல்பட்டு மாவட்டம்.

மாவட்டத் தலைவர்: தோழர் சாந்தசீலன்

மாவட்டச் செயலாளர்: தோழர் அன்பு

மாவட்டப் பொருளாளர்: தோழர் முத்துக்குமார்

### திருப்பத்தூர் மாவட்டம்.

மாவட்டத் தலைவர்: தோழர் ஜெயசீலன்

மாவட்டச் செயலாளர்: தோழர் இராஜசேகர்

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்: தோழர் நவீன்குமார்

## (தெற்கு மண்டலம்)

### மதுரை மாவட்டம்

மாவட்டத் தலைவர்: மருத்துவர் சந்திரன்,

துணைத் தலைவர்கள்: பேராசிரியை சாந்தி, தம்பி அழ. பிரபு

மாவட்டச் செயலாளர்: வழக்கறிஞர் பி.அமர்நாத்

துணைச் செயலாளர்கள்: தோழர் முருகன், தோழர் பெரியார் மருது,

மாவட்டப் பொருளாளர்: தோழர் ஸ்டுடியோ சு. சரவணன்

மாவட்ட இளைஞரணித் தலைவர்: தோழர் பா. பகலவன்

மாவட்ட இளைஞரணிச் செயலாளர்: தோழர் பி. கார்த்திகேயன்

இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர்: தோழர் சொக்கலிங்கம்

### திருநெல்வேலி மாவட்டம்

மாவட்டச் செயலாளர்: தோழர் நெல்லை சந்தானம் (மாநில இளைஞரணிச் செயலாளர்)

திராவிட மாணவர் பேரவை மாநில அமைப்பாளர்: தோழர் நெல்லை பாபு

### விருதுநகர் மாவட்டம்

மாவட்டத் தலைவர்: தோழர் கணேச மூர்த்தி

மாவட்டச் செயலாளர்: தோழர் இராஜேஷ்

மாவட்டத் துணைச் செயலாளர்: முனைவர் வெ. பழனிவேலு

மாவட்டப் பொருளாளர்: தோழர் ஜே. பாஸ்கரன்

### (சிவகங்கை மாவட்டம்)

மாவட்டத் தலைவர்: தோழர் பரமேஸ்வரன்

மாவட்டச் செயலாளர்: தோழர் நவில்

### (தென்காசி மாவட்டம்)

மாவட்டத் தலைவர்: தோழர் சி.சேக்கிழார்,

மாவட்டச் செயலாளர்: வழக்கறிஞர் இரா.அருள் ஜோதி பாபா

மாவட்டத் துணை செயலாளர்: தோழர் சு.பரசுராமன்

மாவட்டப் பொருளாளர்: தோழர் ஆர்.கிப்ட்ஸன்

### (இராமநாதபுரம் மாவட்டம்)

மாவட்ட அமைப்பாளர்: தோழர் மேக வண்ணன்

(பொறுப்பு மாற்றம்)

காஞ்சி மாவட்டச் செயலாளராக இருந்த தோழர் இளமாறன், அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு மாநில இளைஞரணி துணைச் செயலாளராகவும், மாவட்டத் தலைவராக இருந்த தோழர் செந்தாமரைக் கண்ணன் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, பேரவைக்கான ஊடகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டு உள்ளனர். இதுவரையும் ஒருங்கிணைந்து இருந்த காஞ்சி - செங்கல்பட்டு மாவடங்கள் இப்போது காஞ்சி மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் என்று பிரிக்கப்பட்டுப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். திண்டுக்கல் மாவட்டம் தெற்கு மண்டலத்திலும், கரூர் மாவட்டம் கிழக்கு மண்டலத்திலும் இணைக்கப் படுகிறது. பேரவைத் தோழர்கள், புதிய பொறுப்பாளர்களுடனும் இணைந்து செயல்பட வேண்டுகிறேன். ஏனைய இரு மண்டலப் பொறுப்பாளர்கள் பின்னர் அறிவிக்கப் படுவார்கள்.

**சிற்பி.செல்வராஜ்**
(பொதுச் செயலாளர்)
திராவிட இயக்கத் தமிழர் பேரவை.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian